திருவளரும் செந்தமிழாம் தேமலர்தா னெப்பொழுதும்
முருகு விரித்தொளிரும் மூவுலகும் அம்மானை !
முருகு விரித்தொளிரும் மூவுலகும் ஆமாயின்,
அருமைமிகு வானவரும் அணிவரோ? அம்மானை !
அங்கொன்றைத் தாரனுமுன் அன்புவைத்தான் அம்மானை !
தேங்குசுவை யில்கவினில் திகழ்பழமை யின்மிகுந்த
பாங்கி னுயர்மொழிநம் பைந்தமிழ்காண் அம்மானை !
பாங்கி னுயர்மொழிநம் பைந்தமிழே ஆமாயின்,
ஆங்கிலத்திற் பொருள்மிகவே அளித்திடுமோ? அம்மானை !
அகத்தும் புறத்தும் அளித்திடுங்காண் அம்மானை !

ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே !
மன்னியமூ வேந்தர்கள்தன் மடிவளர்ந்த மகளே !
தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வி !
கானார்ந்த தேனே ! கற் கண்டே ; நற் கனியே !
கண்ணே ! கண் மணியே! அக் கட்புலஞ்சேர் தேவி !
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே !
அம்மே ! நின் சீர்ப்பெருமை அறைதலியார்க் கெளிதே !

ரா. வேங்கடாசலம் பிள்ளை.

ஆதியில் உலகம் முழுதும் உலவிய
அமிழ்தெனுந் தமிழ் மொழியே
மாதொரு பாகன் மகிழ்ந்தெமக் கீந்த
மதுரத் தமிழ் மொழியே ;
அன்று முதலா இன்று வரையில்
அழியாத் தமிழ் மொழியே ;
என்றும் இளமை குன்று தழகுடன்
இலங்குந் தமிழ் மொழியே ;
காதுக்கினிய ஓசை ஒழுகும்
கன்னித் தமிழ் மொழியே ;
ஓதற் கினிய மொழிக ளமைந்த
ஓங்குந் தமிழ் மொழியே ;
தாயும் தந்தையுங் கொஞ்சி என்னைத்
தழுவிய தமிழ் மொழியே ;
ஆயும் புலவர் கூடி நாடி
அறிந்த தமிழ் மொழியே ;

தெலுங்கு கன்னடந் துளுமலை யாளந்
  தோன்றுந் தமிழ் மொழியே;
இலங்குங் கோயில் எங்குந் தங்கும்
  இசைமிகு தமிழ் மொழியே;
எந்தன் செந்தமிழ் எந்தன் செந்தமிழ்
  என்று மகிழ் வேனே;
எந்தாய் மொழியென எந்தாய் மொழியென
  எங்கும் புகழ் வேனே.

மணி. திருநாவுக்கரசு முதலியார்.

---

1935ஆம் டிசம்பர்மீ கிறிஸ்துமஸ் விடுமுறை நாட்களில்
சென்னைப் பல்கலைக்கழகச் 'செனெட்' மண்டபத்தில்
உயர்தரப் பள்ளிக்கூடங்களில் தமிழ்ப்பாடம்
போதிக்கும் முறைபற்றிய விரிவுரைக
ளாற்றிய சென்னை நகராண்
மைக் கழகக் கல்வித் துறைத்
தலைவர்

**திருவாளர்:**

**ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B. A., L. T.,**

திறமையைப் பாராட்டிக் கூறிய

## செய்யுட்கள்

வெண்பா

உச்சிதமா நந்தமிழை யோதுவிக்கு நன்முறையைச்
சச்சிதா நந்தப்பேர்த் தண்ணளியோன்—மெச்சும்வகை
ஓதி யுணர்த்தி யுதவினன் வாழியென்றும்
ஆதி பகவனரு ளார்ந்து. (௧)

கட்டளைக் கலித்துறை

மறையிற் சிறந்தது வள்ளுவர் மாமறை மாண்புநிறை
பிறையிற் சிறந்தது மூன்றும் பிறையவை போற்பிறங்கு
துறையிற் சிறந்திடு தென்றமிழ் போதிக்குந் தூய்மைமிகு
முறையிற் சிறந்தது சச்சிதா நந்தன்மொ ழிமுறையே.(உ)

விருத்தம்

அன்றொருசச் சிதாநந்த னரனாற்கீழ் நால்வருக்கே
யருளிச் செய்தான்
இன்றொருசச் சிதாநந்த னரனாற்கீழ்த் தென்முகமா
விருந்த நேகர்க்
கென்றுமுள தென்றமிழைப்போதிக்குமெழின்முறையை
யினிது ரைத்தான்
நன்றறிசெந் நாச்செல்வீர் ! இருவர்தமி லெவனதிகன்
நவிலு வீரே. (ந)

---

குறிப்பு :—(1) சச்சிதாநந்தன்—அரன் = சிவன்
சச்சிதாநந்தன்—நரன் = (பொருள் வெளிப்படை)

(2) ஆல் கீழ்—கல்லாலமரத்தின் கீழ்
ஆல் கீழ்—ஸெனெட்ஹால் (Hall) மண்டபத்தில்

(3) தென் முகம்—தெற்கு முகம்
தென் முகம்—(அழகிய)சுமுகம்

(4) நால்வர்—சனகாதியர் நால்வர்
அநேகர்—பண்டிதர் பலர்

இங்ஙனம்,

போளூர் } கருந்திட்டைக்குடி, வி. சாமிநாத பிள்ளை,
28-12-35. } தமிழ்ப்பண்டிதர், போர்டு ஐஸ்கூல்.

---

310

# அறிவியற் பகுதி - Science

## புத்தகமும் வித்தகமும்

[திருமதி குண ஜனர்த்தனம் M. A., L. T.,]

புத்தகம் என்றால் என்ன? யாண்டும் புத்தகங்கள் பலவாக மலிந்து கிடக்கும் இந்நாளில், புத்தகம் என்றால் என்னவென வினுதல் பலருக்கு விந்தையாகத் தோன்றலாம். மனித உருவில் இருப்போர் அனைவரும் மக்களாவரோ? அவர்களிற் பெரும்பாலார் மாக்களேயாவர். ஒரு சிலரே மக்களெனக் கருதப்படுதற் குரியவராவர். இஃது யாவரும் அறிந்த தொன்றேயாம். அதுவே போல, அச்சிடப் பெற்ற பலகாகிதங்கள் ஒன்று சேர்க்கப்பட்டுப் படங்கள் விரவியோ விரவாமலோ மேல் அட்டையிடப் பெற்றுப் புத்தக வடிவில் இருப்பன அனைத்தும் புத்தகமாகா. இற்றைநாள், புத்தகமாக வழங்குபவற்றுள் ஒருசிலவே புத்தகம் என்னும் பெயருக்கு உரிமையுடையனவாய் இருக்கின்றன.

புத்தகம் என்பது, பெரியார் ஒருவர் தாம் கண்ட உண்மையிலோ அல்லது அழகிலோ ஆழ்ந்து தாழ்ந்து அதன் பயனை 'யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் ஒரு செவ்விய நோக்கால் தூண்டப்பெற்று, அவ்வுண்மையையோ, அழகையோ பிறரும் உணர்ந்து இன்பமெய்த அவற்றினை எழுத்துக்களால் எழுதி விளக்குவதே யாகும்.

ஒரு நூலிற்கு ஏடுகள் இத்துணை தான் இருத்தல் வேண்டும்; படங்கள் இத்துணை வேண்டும்; அட்டை இன்னணம் இருத்தல் வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் இல்லை. ஒரோவொரு ஏடே புத்தகமாகலாம்; ஆயிரம் ஏடுகளிலிருந்தும் புத்தகம் ஆகாமலிருக்கலாம்.

செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளில் சீரிய கூரிய தீஞ்சொல் வௌவிய புலமை மிக்கவர்களால் இயற்றப்பெற்றவையே நூற்களாம். இவைகளைத் தற்காலத்து உலவும் போலி நூல்களினின்றும் பிரிப்பதற்காகவே, இவற்றிற்கு இலக்கியம் என்னும் சிறப்புப்பெயரும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அரும்பெருங் கருத்துக்கள் எழுத்து வடிவில் இருப்பதே புத்தகமாகும். அஃதன்றி, சீரிய மதுரம் வாய்ந்த மொழிகளால் மிகவுயர்ந்ததொரு பொருளைப்பற்றி ஒருவர் பேசினும் அப்பேச்சுப் புத்தகமாகாது. பேசப்படும் சொற்களை எதிர் நின்று கேட்போரே இன்பமெய்தலாம்; உய்யலாம். ஆனால் பிறர் எவ்வாறு அவற்றின் பயனை அடைதல் சாலும்? அச்சொற்கள் உலகத்துக்கே பயன் தரத்தக்கனவாகையானும், ஒரோவொருவர் உலகமுழுதும் தாம்கண்ட உண்மையையோ, அழகையோ உரைக்க முடியாதாகையானும், தாம், அந்த உண்மையிலோ, அழகிலோ ஈடுபட்ட அந்த நேரமன்றிப் பிற நேரங்களில் அவ்வளவு சொல் நயத்துடன் பேச முடியாதாகையானும், அவர் இறந்துபட்ட பின்னும் பிறருக்குப் பயன் படவேண்டியதாகையானும், அச்சொற்களனைத்தும் எழுதப்படவேண்டி யிருக்கின்றன. இங்ஙனம் எழுதப்பட்ட நூல்களுள் அவற்றை ஆக்கியோரையே காணலாம் (Author's personality is seen in his works). ஒருவர் கம்பர் கவி ஒன்றைப் படிக்குங்கால், கம்பரை அறிந்த (அவர்தம் சொன்னயம், பொருள்நயம் தெரிந்த) மற்றொருவர் அதனைக்கேட்ட அளவிலேயே 'இஃது கம்பர் கவியோ? அவருடையது போன்றிருக்கிறதே'. என்று கேட்பது இயல்பேயன்றோ? கம்பர் இன்ன கருத்துள்ள கவி பாடியிருக்கின்றார் என்பது தெரியவேண்டுவதில்லை. ஆனாலும் இன்ன கருத்தை இவ்வாறுதான் பாடுவார் என்பது, அவர்தம் மற்ற கவிகளைப் படித்துணர்ந்தோர் அறிவர். ஆகலின் ஆக்கியோரை அவரால் ஆக்கப்பட்டவைகளில் காணுதல் கூடும் என்பது இனிது விளங்கும்.

கடிதங்களில் யாம் ஒருவரை ஒருவர் காணுகின்றோமல்லமோ? அவையனைத்தும் இலக்கியமாகுமா? புத்தகமாகுமா? எனச் சிலர் ஐயுறலாம். கடிதங்களிலும் சில இலக்கியமாக விளங்குகின்றன. மேனாட்டு அறிஞர்களாகிய செஸ்டர்பீல்டு (Lord Chesterfield), மெக்காலே (Lord Macaulay) ஆகிய இன்னோரன்னவர்களால் இயற்றப்பட்ட கடிதங்கள் இலக்கியமாகவே கருதப்படுகின்றன.

ஆனால் யாம் எழுதும் கடிதங்களும் இலக்கியமாகுமோ எனச் சற்று ஆராய்வாம். செவ்விய மதுரஞ்சேர்ந்த நற்பொருளைச் சீரிய கூரிய தீஞ்சொற்களால் எழுதினால், அஃதே புத்தகமாகும் என முன்னரே கண்டோமல்லமோ? நாம் எழுதும் கடிதங்களில் நம்மை, மிகக்குறுகிய நோக்கங்களுடைய நம்மை வேண்டுமானால், காணலாமேயன்றி, உயரிய

நோக்கமும் அதற்கேற்ற தீஞ்சொல்லும் அமைவது அருமையினும் அருமையாகும்.

மகனொருவன் தன் தாய்க்குக் கடிதமொன்று எழுதுகிறான். அம்மகனுக்குத் தன் தாயின்பால் எத்துணை அன்பு உண்டோ, அஃது ஆண்டவனுக்குத்தான் தெரியும். நாளுக்கு, திங்களுக்கு, அல்லது ஆண்டிற்கு ஒருமுறையேனும் தன்னை ஈன்ற தாயின் அடிவீழ்ந்து அவன் பணிவானோ இல்லையோ தெரியாது. அங்ஙனம் பணிவதே, பிறர் நகைக்கத் தக்க மானக்கேடான செய்கையாகும் என அவன் கருதுபவனாகவே இருக்கலாம்.

இத்தகைய மகனொருவன் தன் கடிதத்தைத் தொடங்கும் வகையே கருதற்பாலது, "தேவரீர் அம்மா அவர்களின் திவ்விய பொற்பாத கமலங்களுக்கு அநேககோடி சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து எழுதுவது" எனத் தொடங்குகிறான். அம்மையின் அடிகளே இத்துணை வந்தனைக் குரித்தாயிருந்தால் அவரது திருவுரு முழுதும் எத்துணை வழிபாடு பெறும் என்று நோக்குமின்கள். ஒன்றிரண்டு வந்தனைகளல்ல, அல்லது ஒரு கோடியுமல்ல, அநேககோடி வந்தனைகள்! இஃதே முறைமையும், உலகவழக்காகவும் இருக்கிறது. இங்ஙனம் முதலிலேயே பொய்மையுடன் தொடங்கப்பட்டதாளில் அம்மகனைக் காண்பது எவ்வாறியலும்?

இது நிற்க, புத்தகமாவது அரும்பொருள்களைச் செவ்விய சொற்களால் எழுதப்பெற்றதே என முன்னரே கண்டோம். அப்பொருளையும் அச் சொற்களையும் நமக்கு ஆக்கித்தந்த ஆசிரியரைக்காட்டிலும், அவரால் ஆக்கப்பட்ட அந்நூல் மிக்க பெருமை பொருந்தியதாகும். அஃதேனெனின், அப் பெரியாரை யாம் நேரில்கண்டு அவரடையும் இன்பப் பெருக்கை யாமும் அடைய வேண்டுமாயின் அவரது ஓய்வு நேரத்தை யாம் நோக்கியிருத்தல் வேண்டும்; நமக்கு வேண்டும்போது அவர் எடுத்துக் கூறப்போவதில்லை. அப்படி நமக்காக உரைசெய்தாலும், அவ்வுரை செவ்விய சொற்களால் இயல்பாய் அமைந்தவைகளாகா; வலிந்துவந்த சொற்களாகவே இருக்கும்; ஆனால் புத்தகமோ அப்படியன்று என்க.

நாம் ஆக்கியோன் செவ்வியை நோக்கியிருப்பது போக, அவரால் ஆக்கப்பட்ட நூல்கள் நம்செவ்விநோக்கிக் காத்திருக்கும். நாம் எந்த நேரத்தில் விழைந்தாலும் அமுதூட்ட அவை காத்திருக்கின்றன. முகந்திரிந்து நோக்கக் குழையாவிருந்து அவையே ஆகும். விருப்பமில்லையேல் அவற்றைத் தூக்கிப்

போட்டு விடலாம். மறுமுறை விருப்பங்கொண்டு அவற்றைத் தேடின், முன் நாம் அவற்றை இகழ்ந்தமைக்காக அவை நம்மை இகழப்போவதில்லை. 'இன்னுசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண—நன்னயஞ் செய்து விடல்' என்ற பொய்யா மொழிக்கேற்ப, அவை நமக்கு நன்மை பயக்கவோ அல்லது இன்பத்தை ஊட்டவோ காத்துநிற்கும். ஆகலின் இத்தகைய உயர்ந்த குணங்களையுடைய புத்தகங்களைப் புறக்கணிப்பது பொருந்தாச் செயலாகும். ஆனால் புத்தக வடிவில் உலவி வரும் போலிப் புத்தகங்களைக் கண்டுமயங்கி விடலாகாது.

முற்காலத்தில் போலிப் புத்தகங்களைப் பற்றிய அச்சம் இல்லை. ஆனால் இக்காலத்திலோ அச்சுப்பொறிகள் இவ்வச்சத்தை உண்டாக்கிவிட்டன. பண்டைய காலங்களில் ஒரு புத்தகத்தின் பிரதி வேண்டுமானால் கையாலேயே எழுத வேண்டியதாயிருந்தது. ஆகலின் இக்காலத்தைப் போல் பல பிரதிகள் அடைவது இயலாததாயிருந்தது. பிரதிகளின் எண்ணிக்கைக் குறைவாயிருந்ததினால் அவற்றின் விலை அதிக மாக இருந்தது. ஆனால் இக்காலத்தில் அச்சுப்பொறிகளின் உதவியினால் ஒரே நாளில் ஆயிரக்கணக்கான பிரதிகள் வெளியிடலாம். அதற்கேற்பவே அவற்றின் விலையும் மிகக் குறைந்திருக்கிறது. இதனால் ஒரு வகையில் தீங்கும் உண்டாவதாயிற்று.

அஃதென்னவெனில், புத்தகம் என்னும் பெயருக்கு ஒரு சிறிதளவேனும் பொருத்த மில்லாதவைகளும், புத்தகவடிவாக, ஆயிரக்கணக்கில் வெளிவந்து விடுகின்றன. பொது மக்களும் அவற்றின் அழகிய உருவைக்கண்டு அவை புத்தகமெனவே மயங்கிவிடுகின்றனர். முற்காலத்தில் இயற்கைத் தேர்வு (Natural Selection) என்றதற்குத் தனியாட்சி இருந்தது.

இந்த இயற்கைத்தேர்வு யாண்டும் பரவ வேண்டுமாயின் அச்சுப்பொறிகள் ஒழியவேண்டும். அவை ஒழிந்தவுடனே இயற்கை அன்னை தக்கதைக்கொண்டு தகாததைத் தள்ளி விடுவள் என்பதற்கு ஐயமில்லை.

பயனற்ற விகடத்துணுக்குகளும் உதவியற்ற தற்கால நாவல்கள் முதலிய நூல்களு மழியாமல் இருப்பதன் பொருட்டுப் பிரதி எடுக்க எவன்தான் முன்வருவான்? அப்படி ஒருவன் முன்வந்தாலும் அவனுக்குப் பிற்பட்டவரும் அந்த நூல்களை உயர்ந்தவையெனக் கருதினாலல்லவோ அவர்கள், ஏற்கனவே யிருக்கும் பிரதிகள் அழியுமுன் வேறு பிரதிகள் எடுப்பர்!

இப்படியாக நாளடைவில் பயனற்ற நூல்கள் கழிக்கப்பட்டு விடும்.

இயற்கையின் பகுத்தறிவு இங்ஙனம் ஆட்சி புரிந்தால் தான் நமது கைக்கெட்டிய பண்டைய நூல்களனைத்தும் உயர்ந்த இலக்கியமாகப் போற்றப்படும். யாம் நல்லறிவும் இன்பமும் ஊட்டும் தலைசிறந்த இலக்கியங்களைப் பொறியின் உதவியினால் பெருக்குவதை விடுத்து, மிகக்குறுகிய காலத்தி லும் குறைந்த செலவிலும் வெளியிடத்தக்க பயனற்ற புத்தகங்களை மல்க விடுகிறோம். பொறியை இயற்கைக்குத் துணையாகக் கொள்வதைத் தவிர்த்து, அதனை இயற்கையை எதிர்த்துப் போரிட விட்டிருக்கிறோம். நமது அறியாமைதான் என்னே!

இனி, புத்தகத்திற்கும் வித்தகத்திற்கும் உள்ள தொடர்பைக் கருதுவோம்.

தற்காலத்தில் ஆரம்பக்கல்வியென்றும், கட்டாயக் கல்வியென்றும், உயர்தரக்கல்வி என்றும், பெண்கல்வி யென்றும் இத்தகைய சொற்கள் நம் காதில் விழுந்தபடியே இருக்கின்றன. இந்தக்கல்வி வேண்டும், அந்தக்கல்வி வேண்டுமெனப் பல சங்கங்களும், சபைகளும், கழகங்களும் கூடிக் கிளர்ச்சி செய்கின்றன. எந்தக் கல்விக்கும் தற்காலத்தில் புத்தகங்கள் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. ஆனால் பண்டைக் காலத்தில் நூல்கள் மூலமாகக் கல்வி கற்கப்படவில்லை என்றும், ஓர் ஆசிரியரிடமிருந்து அவர் வாய்மூலமாகவே மாணாக்கர் கற்று வந்தனர் என்றும் நாம் நூல்களில் படிக்கிறோம். தற்காலத்தில் தான் நூல்கள் கல்விக்கு இன்றியமையாதனவாக இருக்கின்றன.

புத்தகமின்றியும் வித்தகமடையலாமெனினும், அஃது ஒருசிலர்க்கே இயலும்.

'Tongues in trees, books in the running brooks
Sermons in stones, and good in every thing'

மரங்களில் நாவும், ஓடும் ஓடைகளில் புத்தகங்களும், கல்லிற் பிரசங்கங்களும், இன்னும் எல்லாவற்றிலும் நன்மையைக் காணக்கூடியவர்கள் மிகச் சிலரே. இத்தகைய அரும் பெறல் ஆற்றல் வாய்ந்தவருங் கூடப் புத்தகங்களால் (உண்மைப்புத்தகம்) இன்னும் அதிக நன்மையடைவார்களென்பதில் ஐயமில்லை,

ஆகவே, இயற்கை கற்பிக்கும் அறிவுரைகளைக் கண்டு தெளிய முடியா நிலையிலிருக்கும் நாம், ஆன்றோர் கண்டு

தெளிந்து, நமது நன்மைக்கும் இன்பத்திற்கும் எழுதிப் போந்த புத்தகங்களையேனும் படித்துத் தெரிந்து கொள்ளக் கூடாதோ?

கல்வியில்லாதவன் கண்ணில்லாதவனென ஆன்றோர் கூறியிருப்பது காண்க.

'கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்'

ஆனால் தற்காலத்துக் கல்வி உண்மையில் கண் அளிக்கிறதா என்பது கவனிக்கற்பாற்று. வயிற்றுப் பிழைப்புக்கே இக்காலத்தில் கல்வி கற்கப்படுகிறது. அறிவுவளர்ச்சியின் பொருட்டுக்கல்வி கற்போர் மிகச்சிலரேயாவர்.

ஆன்ற பெரியோர்களால் சொல்நயம் பொருள்நயம்பட மிக அழகாக எழுதப்பட்ட நூல்களே வகுப்புகளில் பாட புத்தகமாக வைக்கப்பட்டிருப்பினும், மாணவர்கள் உண்மையில் அவற்றின் பயனை அடைகின்றார்களா என்பதுதான் ஐயம். தேர்வுகளில் (Examination) முன்னணியில் தேரவேண்டும், அப்பொழுதுதான் எளிதில் வேலை கிடைக்கும் என்று எண்ணுகிற மாணவர்கள் அந்நூல்களின் இன்பத்தை எங்ஙனம் எய்தல்கூடும்? அந்த நூல்கள் அவர்களை வருத்த வந்த கூற்றுவனாக அல்லவோ கருதப்பட நேரும்.

தேர்ச்சியாளன் (Examiner) என்ன கேட்பானோ, அதற்குத் தக்க விடைகளைப் படித்துக்கொள்வோம்; அவன் இன்னானெனத் தெரிந்தால் அவனுக்கு இந்நூலைப்பற்றிய கருத்தென்ன என்பதைத் தெரிந்துகொள்ளலாமே; அதற்கேற்றவாறு நமது விடைத்தாளில் (Answer papers) நாம் ஒத்துப்பாடி விடலாமே, என்று பெரும்பாலான மாணவர்கள் எண்ணுகின்றார்கள். இங்ஙனம் பாடங்களைப்படிப்போர், எத்துணைப்பட்டம் பெற்றவர்களாயினும் கற்றவர்களாவரோ?

ஆக்கியோன் கண்கொண்டு, அவன் உள்ளத்திற் புகுந்து ஒருவன் ஒருநூலைக் கற்பானானால், அந்நூலின் உண்மைக் கருத்து என்றும் அவன் மனதில் வேரூன்றி அவனைத் தூய்மைப்படுத்தும். ஒரு ஏடானாலும் ஒருவன் இங்ஙனம் படிப்பானாயின் அவனை அதுவரை படித்தவனென்றுதான் கொள்ள வேண்டும். ஆயிரம் ஏடுகளானாலும், நுனிப்புல்மேய்வது போல் ஒருவன் படித்திருப்பானாயின் சிறிதளவும் அவன் கற்றவனாகான்.

ஆக்கியோன் காலதேசவர்த்தமானங்களைக் கொண்டும்

அவன் கருத்து இன்னதென அறிந்தும் படித்தால்தான் நூலின் பயனை நாம் அடைவோம்.

இயற்கையின் அழகைப்பற்றி அநேக பாக்கள் எழுதப் பட்டிருக்கின்றன. இயற்கையாவது நம் முன் காணும் இயற்கைதான்; நமக்கு அகப்படாத தொன்றன்று. ஆனால் புலவர்மாட்டு அவ்வியற்கைப் பலவித அழகான உயர்ந்த எண்ணங்களைக் கிளப்பி விடுகின்றது. ஒவ்வொரு புலவனும் ஒவ்வொருவிதமாக ஓர் இயற்கையின் அழகை விவரிக்கிறான்.

நிலவைக் கண்ட ஒருபுலவன் அதை ஓர் அரசியாகவும் அதைச்சுற்றியுள்ள விண்மீன்களைப் பாங்கியராகவும் காண்கிறான்; அந்நிலா மேகத்தில் மறையும் போழ்து, அவ்வரசி கொலு நீங்கி அந்தப்புரம் செல்வதாக எண்ணுகிறான்.

இந்நிலவே மற்றொருவனுக்குப் பெண்களின் முகத்தை நினைவூட்டுகிறது. அவன், அது மேகத்தால் மறைக்கப்பட்ட போது பெண்களின் அழகினுக்குத் தோற்று, தன் மாசு மறுவுகளைக் கண்டு நாணி மறைந்து கொள்வதாகக் காண்கிறான்.

இருபுலவரும் ஒரே பொருளைப்பற்றிக் கூறிய போதும் அவர்கள் கருத்து வெவ்வேறாக மாறுபடுகிறதன்றோ? இக் கருத்து வேறுபாடுகள் அவரவர் இயல்பைப் பொருந்தியன. அவரவர் நோக்கைப் பொறுத்தன. அறிவியல் நூல்களுக்கும் இலக்கிய நூல்களுக்கும் உள்ள வேறுபாடு இதுதான்: அறிவியலிலோ எத்துணைபேர் எழுதப்புகுந்தாலும் கருத்து வேறுபாடு இராது; ஆக்கியோன் இயல்பும் காண இயலாது. ஆனால் இலக்கியமோ அவ்வாறன்று. இது கம்பன் இது புகழேந்தி, இது ஔவையெனக் கூறத்தகுந்தவை.

உடலும் அறிவும் ஒவ்வொருவருக்கும் இயற்கையாக அமைந்துள்ளன. அவற்றிற்கு உற்ற பயிற்சியை நாளுங் கொடுத்து வந்தாலொழிய அவை செவ்வனே வளரா. அறிவின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது புத்தகமாகும்.

மாந்தர்பால் அவ்வப்போது தோன்றும் தெய்வ உணர்ச்சி மறையா வண்ணம் காப்பது நூல்களே. வீண் காலப் போக்குக்காக எழுந்துள்ள விகடன்களும், நாவல்களும் நூலல்ல. அவை பண்புமில; பயனுமில.

மக்கள் தத்தமக்குத் தெரிந்த மொழியிலுள்ள இலக்கியங்களை ஊன்றிப்படித்து வருவரேயாயின், உலகு முன்னேற்றம் அடையுமென்பதற்கு ஐயமில்லை. தமிழராகிய யாம் நம்

317



பரையும், வள்ளுவரையும், அகநானூறு, புறநானூறு முதலிய தொகை நூல்களையும், சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பெருங்காப்பியங்களையும் அடிக்கடி கையாண்டு வருவோமாயின், நாம் நன்மையும் இன்பத்தையும் அடைவது திண்ணம்.

சிறந்த இலக்கியங்கள் மூலமாக மேலோர் நம்முடன் உரையாடி தம் அரும் பெருங் கருத்துக்களை நமக்கு உதவுகின்றனர். தெய்வப்புலமையோர் செந்நாக்கவிஞர், நம் இல்லங்களில் வந்து தங்குவாராயின் நாம் எவ்வளவு எளியவராயிருந்தாலும், அனைத்து மடைந்தவரே யாவோம். இப்பெரும்புலவர்கள் வீற்றிருக்க வேண்டிய அரியாசனத்தைப் போலிப் புலவருக்கு நல்கி, அவர்களுக்கு அடிமையும் பட்டுக்கிடப்பவரின் அறியாமைதான் என்னே!

வள்ளுவர் உவந்து தம் முப்பாலையும் பொழியக் காத்து நிற்கிறார். கம்பர் முதலாய மற்றோர் தம் கற்பக தருக்களாகிய நூல்களினின்றும் வேண்டுவன வேண்டுபவர்க்கு அளிக்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை நல்வரவேற்போம்; இவர் தம் செவ்விய உரைகளைக் கேட்போம்; கேட்டு நற்பயனை அடைவோம்; இன்பமெய்துவோம். பிறருக்கும் இவ்வின்பத்தை எடுத்துக் காட்டி அவர்களும் அதை நுகருமாறு செய்வோமாயின் நம் வாழ்நாள் வீழ்நாளாகா.

## செய்திகளும் குறிப்புகளும்:
## News and Notes

இங்கிலாந்தின் அரசரும் இந்தியச் சக்கரவர்த்தியாகவுமிருந்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் சென்ற ஜனவரித் திங்கள் 20-ம் நாளிரவு தம்முடைய எழுபதாவது ஆண்டில் உலக வாழ்வை நீத்தமை மக்களனைவரையும் மாபெருந்துயர்க் கடலில் ஆழ்த்திவிட்டது. காட்சிக்கெளியர்; மாட்சி மிக்கவர்: அன்புருவினர், ஆண்மை நிறைந்த ஆண்டகை; அந்தோ ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் மாண்டார்!

* * *

மாண்ட மன்னரின் மாண்மிகுமைந்தர், கண்டார்ப் பிணிக்கும் கவினர் இளவரசர் எட்வர்ட் என்பார், எட்டாம் எட்வர்ட் எனும் பெயர் தாங்கிப் பட்டத்திற்கு வந்துள்ளார்; அவர் வரவு நல்வரவாகுக. அகன்ற மன்னரின் அடிச்சுவடுபற்றி அரசியலை நடத்தப்

போவதாக உறுதி கூறிய மக்கள் நாயகம் எட்டாம் எட்வர்ட் நீடு வாழ்க!!!

## சைவப்பெரியார் பிரிவு

திருவிதாங்கூர் எக்ஸைஸ் கமிஷனராக இருந்து ஓய்வு பெற்றவரும், சைவசித்தாந்தத்தின்கண் அழுந்திய ஆராய்ச்சியுடையவரும், பல சைவசித்தாந்த சபைகளின் ஆண்டு விழாக்களில் தலைவராய் அமர்ந்திருந்தவரும் ஆகிய உயர் சைவத்திருவாளர் த. பொன்னம்பலம் பிள்ளையவர்கள் எல்லாம் வல்ல உமாசிவன் திருவடியடைந்த செய்தி சைவ மக்கட்குப் பெருந்துன்பந் தருவதாகும்.

## தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் அறுபதாம் ஆண்டுவிழா

திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்களைப் பற்றித் தமிழுலகில் அறியாதவர்களிரார். இவர்கள் எழுதிய பாடநூல்களைப் பற்றி அறியாதவர்களுமிரார். இவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின்வழி தமிழ்மொழிக்கும், தமிழாசிரியர்கட்கும் செய்த உதவி மறக்கற்பாற்றன்று. இவர்கள் தமிழாசிரியர்களை நன்குவரவேற்று இன்னுரை கூறி வேண்டுவன உதவி வரும் பெரியார். இவர்களுக்குத் தமிழ்ப் புலவர்ப் புரவலர் என்னும் பட்டத்தைத் தமிழ்மக்கள் சூட்டலாம். இப்பெரியார் தம் அறுபதாம் ஆண்டுநிறைவுவிழா பிப்ருவரி 27 ஆம் நாள் என்பதை யாவரும் முன்னரே பல செய்தித்தாள்கள் வழியும், அறிக்கை வழியும் அறிந்திருக்கக்கூடும். அந்நாளைப் பெருஞ்சிறப்புடன் தமிழ்நாடெங்கும் கொண்டாடுவது தமிழ்மக்களின் சிறந்த கடமையாகும். பொருளுதவ விரும்புவோர் விழாக் கூட்டத்தலைவர். இராவ் சாகிப் சி. பார்த்தசாரதி நாயுடு, கடலகம், சாந்தோம், மயிலாப்பூர் என்ற முகவரிக்கு அனுப்புவார்களாக.

## சேந்தமங்கலம் சைவசித்தாந்த சன்மார்க்க சங்கம்
## பன்னிரு திருமுறைப் பெருவிழா

சேந்தமங்கலம் சைவசித்தாந்த சன்மார்க்க சங்கத்தின் சார்பாக யுவ வருஷம் தைமாதம் 17உ தொடங்கி 18, 19, 20 வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மேற்படியூர் ஸ்ரீ சோமேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் கோவை வழக்கறிஞர் திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் தலைமையில், அம்மூன்று நாட்களிலும், காலை மாலை பன்னிரு திருமுறைகளின் சார்பாகச் செந்தமிழ்ப் புலவர் பெருமக்கள் பன்னிருவரால், பல அரிய சொற்பொழிவுகள் நடைபெற்றன. 20-ஆம் நாள் ஞாயிறு இரவு திருவீதிகளில் திருவுலா, மிகச் சிறப்புடன் நடைபெற்றது. அப்போது வேதாரண்யம் திரு. க. அருணசல தேசிகர் குழுவினரால் பக்க மேளங்களுடன் தேவார பாராயணமும், மேளக்கச்சேரி, வாணவேடிக்கை முதலியவைகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

## சாத்தான்குளம்

ராம. கோபாலகிருஷ்ண பிள்ளை

### இலவசவாசக சாலைத்திறப்புவிழா,

நாளது யுவ ஆண்டுத் தைத்திங்கள் 20-ம் நாள் (2-2-36) ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு ஷை வாசகசாலையின் திறப்புவிழாக் கொண்டாடப்பட்டது.

காலை 8-30-மணிக்கு ஷை வாசகசாலைத்திறப்புவிழாத் தலைவராகிய திருநெல்வேலி நாட்டாண்மைக் கழகத் (Tinnevelly Dt Board) தலைவர் சைவத்திருவாளர், மேடை தளவாய் குமாரசாமி முதலியார் அவர்களையும் அவைத்தலைவராகிய திருநெல்வேலி நாட்டாண்மைக் கழகத் (Tinnevelly Dt. Board) துணைத்தலைவர் சைவத்திருவாளர். T. M. குமரகுருபரன் பிள்ளை B. A· B. L. அவர்களையும், ஷை யூரின் எல்லையிலமைக்கப்பட்டிருந்த பந்தலினின்றும் ஒரு பெரிய கூட்டத்தோடு, மேளம் பேண்டு முதலிய வாத்தியங்களுடன் ஊர்வலமாக வாசகசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

9 மணிக்கு, திருச்செந்தூர் தேவார பாடசாலை மறைத்திரு சோமசுந்தர உபாத்தியாயரவர்களால் தமது குழாங்களுடன் கடவுள் வணக்கம் பாடப்பட்டதன் பின்னர், தலைவரவர்கட்கு ஒரு வரவேற்புரை வாசித்துக் கொடுக்கப்பட்டது. பின்பு திறப்புவிழாத் தலைவர் சைத்திருவாளர், மேடை தளவாய் குமாரசாமி முதலியாரவர்கள் முன்னுரையாகப் பேசியதில், தற்காலத்தில் இத்தகைய வாசகசாலை இன்றியமையாது வேண்டப்படுவதென்றும், இத்தகைய வாசகசாலையால் மக்கள் பெரும்பயனடையக் கூடுமென்றுங் கூறி, இவ்வாசக சாலை ஏற்படுத்திய, திரு. ராம. கோபாலகிருஷ்ண பிள்ளை அவர்களின் கொடைமடத்தையும் பாராட்டிப் பேசியதோடு, இவ்வாசக சாலை எல்லாவற்றிலும் சிறப்புற்று மக்கட்குப் பயன்படவேண்டுமென்று இறைவனை வேண்டுவதாகவுங் கூறி, ஷை வாசகசாலையை வெள்ளித்திறவுகோலால் திறந்து வைத்தார்கள். பின்பு, கொழும்பு வீரகேசரி ஆசிரியர், திரு நெல்லையா அவர்களால் தலைவரவர்கட்கும், மற்றும் வந்திருந்த பெரியார்கட்கும் நன்றி கூறப்பட்டு, சந்தனம் தாம்பூலம் வழங்கியதும் நிழற்படம் ஒன்று எடுக்கப்பட்டுக் கூட்டம் இனிது நிறைவேறியது.

பின்னர், மாலை 4 மணிக்கு அவைத்தலைவர் சைவத்திருவாளர் T. M. குமரகுருபரன்பிள்ளை, B A. B. L. அவர்களின் சீரிய தலைமையின்கீழ் கீழ்க்கண்டவாறு சொற்பொழிவுகள் நடந்தன.

தலைவர் முன்னுரையாக வாசகசாலைகளால் ஏற்படக்கூடிய நன்மைகளைப் பற்றிக்கூறி, ஆண்மக்கட்கேயன்றிச் சிறப்பாகப் பெண் மக்கட்கும் இத்தகைய வாசகசாலை பயன்தரக்கூடியதென்றும்,

320



அவர்களும் வாசகசாலைகளில் கலந்துகொள்ளப் பெற்றோர்கள் தக்கவசதிகள்செய்து கொடுத்தல்வேண்டுமென்றும் கூறினார்கள்.

பின்பு, திருச்செந்தூர், தேவார பாடசாலை மறைத்திரு. சோம சுந்தர உபாத்தியாயரவர்களால் "திருவாரூர்த் தியாகராஜா" என்னும் பொருளைப் பீடிகையாகக்கொண்டு, ஓர் அரியவிரிவுரை நிகழ்த்தப்பட்டது.

அதன் பின், திருநெல்வேலி மதுரை திரவியம் தாயுமானவர் இந்துகல்லூரித் தலைமைத் தமிழாசிரியர். திரு. வித்வான். P. K. அருணசலக்கவுண்டரவர்களால் 'திருநெல்வேலித் தமிழ்' என்னும் பொருள்பற்றியும் திரு. A. சீனிவாசராகவன் M. A. அவர்களால் "தற்காலத்திற்கு வேண்டியது யாது?" என்னும் பொருள் பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

அதன்பின்னர், நாகர்கோவில் ஆங்கில உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர். திரு. M. ஆறுமுகம்பிள்ளையவர்கள் 'கிழக்கும்மேற்கும்' என்னும் பொருள்பற்றி ஓர் அரியவிரிவுரை நிகழ்த்தினார்கள். கடைசியாகத் தலைவரவர்கள் தமது முடிவுரையில் விரிவுரைகளைப் பற்றிச் சில கூறியபின்னர், வாசகசாலையின் தலைவராகிய, திரு. ராம. கோபாலகிருஷ்ணபிள்ளை அவர்களின் தன்னலமற்ற செயல்களையும், அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இலவசவாசகசாலையின் பயனைப்பற்றியும் சிறப்பாகக் கூறி, இதுபோன்ற வாசகசாலை நமதுநாட்டில் ஒவ்வொரு ஊர்தோறும் ஏற்படுத்தவேண்டுமென்றும், அவ்வகையில் இவ்வாசகசாலை ஒரு எடுத்துக்காட்டாகவிளங்கவும் இவர்போன்ற பெரியார் பலருக்கும் இவர்செயல் ஒரு வழிகாட்டியாக இருக்கக் கூடுமென்றுங் கூறி முடித்தார்கள்.

பின்பு, திரு. நெல்லையா அவர்களால் தலைவர் முதலியவர்கட்கு நன்றி கூறப்பட்டுக்கூட்டம் இரவு 8-மணிக்கு இனிது நிறைவேறியது.

---

## மதிப்புரை

முஸோலினி:—இதனை மொழிபெயர்த்தியற்றியவர் திருவாளர் வெங்களத்தூர் சாமிநாத சர்மா ஆவார். இவர் யாவருக்கும் எளிதில் விளங்குமாறு இவ்வரலாற்றினை எழுதியிருப்பது பெரிதும் போற்றத்தக்கது.

இளமையில் உண்ண உணவின்றித் தம் முயற்சியினாலும் உறுதியினாலும் உலகம் மதிக்கத்தக்க நிலையினை அடைந்த இப்பெரியார் வாழ்க்கை வரலாற்றினை ஒவ்வொருவரும் விரும்பிக்கற்றல் இன்றியமையாததாகும். உலக வல்லரசுகளில் இத்தாலியும் மதிக்கப் பெறல் வேண்டுமென்ற கிளர்ச்சிக்கு இவரே காரணராவர்..

இப்பதிப்பு உயர்ந்த காகிதத்தில் அழகாய் அச்சிடப்பெற்றுள்ளது. நங்கழகத்திற் கிடைக்கும். இதன் விலை ரூ. 1 6

